# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : **திரு. மகேசன் காசிராஜன்,** இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 25 /பேரூ/2024**
**நாள் : 10.07.2025**

| | | |
|---|---|---|
| திருமதி. M. முருகாம்பாள்,<br>நெய்க்காரபட்டி,<br>திண்டுக்கல் மாவட்டம். | – | முறையீட்டு மனுதாரர் |
| செயல் அலுவலர்,<br>நெய்க்காரபட்டி பேரூராட்சி,<br>திண்டுக்கல் மாவட்டம். | – | எதிர் மனுதாரர் |

“திண்டுக்கல் மாவட்டம், பழனி, நெய்க்காரபட்டி பெரியகலையம்புத்தூர் அஞ்சல் என்ற முகவரியை சேர்ந்த திருமதி. M. முருகாம்பாள் என்பவரின் 28.06.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 01.07.2024 அன்று பெறப்பட்டு, 25/பேரூ/2024 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

“திண்டுக்கல் மாவட்டம், பழனி, நெய்க்காரபட்டி, பெரிய கலையம்புத்தூர் அஞ்சல் என்ற முகவரியை சேர்ந்த திருமதி. M. முருகாம்பாள் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 28.06.2024 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், பெரியகலையம்புத்தூர் கிராமம் என்ற முகவரியில் வசித்து வந்த லேட். பூம்பாறை அவர்களின் மனைவி திருமதி. பாப்பா வயது சுமார் 70 ஆகும். திருமதி. பாப்பா கடந்த 2002-ஆம் வருடத்தில் இறந்து விட்டார்கள். மேற்படி திருமதி. பாப்பா என்பவர் எனது மாமியாருக்கு பெரியம்மா முறையாகும். ஆகவே எங்களது பாட்டி திருமதி. பாப்பா கடந்த 30.06.1990-ஆம் ஆண்டு உயில் சாசனம் மூலமாக எனது மாமியாருக்கு எழுதிக் கொடுத்துள்ளார். அந்த சொத்து விபரம் பழனி ரீடி. பழனி சப்டி 2, பழனி வட்டம், நெய்க்காரபட்டி

பேரூராட்சி, பெரியகலையம்புத்தூர் கிராமம், பழைய நத்தம் சர்வே எண்.36/1 புதிய சர்வே எண்.463/2 பரப்பு 0.0098 உள்ள சொத்திற்கு நான்குமால் விபரம்:

| | | |
|---|---|---|
| வடக்கு | - | சர்வே எண்.463/1 முருகன் மகன் பழனிச்சாமி இடம் |
| கிழக்கு | - | பாதை |
| தெற்கு | - | சந்து |
| மேற்கு | - | சந்து |

மேற்படி சொத்திற்கு பழைய வீட்டு வரி விதிப்பு எண்.2316 1996-1998ஆம் வருடத்தில் திருமதி. பாப்பா என்ற பெயரில் இருந்தது. ஆனால் தற்போது மேற்படி சொத்தின் வீட்டு வரி ரசீதில் நித்தியானந்தம் என்ற பெயர் உள்ளது. நித்தியானந்தத்திற்கும் மேற்படி சொத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. மூன்று வருடங்கள் வாடகைக்கு மேற்படி வீட்டில் நித்தியானந்தம் என்பவர் குடியிருந்துள்ளார். தற்போது நித்தியானந்தம் என்பவர் வயோதிக காலத்தில் இறந்தும் விட்டார். இந்நிலையில் எப்படி நித்தியானந்தம் என்ற பெயர் சொத்து வரி ரசீதில் இடம் பெற்றது என்ற விபரம் தெரியவில்லை. இரண்டு, மூன்று வருடங்கள் வாடகைக்கு குடியிருந்த காரணத்தினாலும், எனது பாட்டிக்கும், எனது மாமியாருக்கும் எழுத படிக்க தெரியாத நிலையை பயன்படுத்தி பேரூராட்சி அதிகாரிகள் உதவியினால் யாரோ எங்களுடைய சொத்திற்கு சம்பந்தமில்லாத நபர் முறைகேடாக பெயர் மாற்றம் செய்துள்ளார்கள்.

பெயர் மாற்றம் செய்ததற்கான எந்த ஒரு ஆவணமும் அவர்களிடம் இல்லாத நிலையில் அதிகாரிகள் தன்னிச்சையாக எனது பாட்டி திருமதி. பாப்பா பெயரிலுள்ள வீட்டுவரி ரசீதை நித்தியானந்தம் பெயரில் மாற்றம் செய்துள்ளார்கள். அதன் புதிய வீட்டு வரி விதிப்பு எண். 1536 என்றுள்ளது. எனக்கு இந்த விபரம் தெரிய வந்தபோது இப்போது இதுகுறித்து நெய்க்காரபட்டி பேரூராட்சி அதிகாரிகளிடம் நேரில் சென்று பலமுறை முறையிட்டும் எந்த பலனும் ஏற்படவில்லை. ஆதலால் கடந்த 18.11.2023ஆம் தேதியன்று இது சம்பந்தமாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், உயர்திரு மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும், உயர்திரு பேரூராட்சி உதவி இயக்குநர் திண்டுக்கல் அவர்களுக்கும், உயர்திரு. செயல் அலுவலர் நெய்க்காரபட்டி பேரூராட்சி அவர்களுக்கும் இதுகுறித்து புகார் மனுவை பதிவு தபால் மூலம் அனுப்பி இருந்தோம். இந்த மனு மீது எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதைத் தொடர்ந்து கடந்த 02.03.2024ம் தேதி அன்று மீண்டும் மேற்படி உயர் அதிகாரிகளுக்கு மனு செய்திருந்தேன். இரண்டு மூன்று முறை தொலைபேசியில் அழைத்தும் விசாரித்தார்கள். நாங்களும் நேரில் நெய்க்காரபட்டி பேரூராட்சி அலுவலகத்திற்கு சென்று உரிய ஆவணங்களை கொடுத்தோம். அதையெல்லாம் பார்வையிட்டு எனது வீட்டை பேரூராட்சி அதிகாரிகள் நேரில் வந்து ஆய்வு செய்து அக்கம் பக்கத்தில் உள்ளவர்களை விசாரணை செய்து விட்டு சென்று விட்டார்கள். இதைத் தொடர்ந்து நான் நெய்க்காரபட்டி பேரூராட்சி அலுவலகத்திற்கு சென்று வீட்டு வரி பெயர் மாற்றம் செய்து தருவது சம்பந்தமாக உரிய அதிகாரிகளை சந்தித்து பேசும் போதெல்லாம் பெயர் மாற்றம் செய்து தருகிறோம் என்று சொல்லி காலம் தாழ்த்தி வந்தனர். மேலும் E.O. வந்தவுடன் உங்களுக்கு போன் செய்கிறோம் என்று சொல்லி அனுப்பி விட்டார்கள். பின்பு E.O. வந்துள்ளார் என்று சொல்லி எங்களை அழைத்தார்கள். நாங்களும் வந்து E.O.விடம் பேசினோம். ரொம்ப நேர்மையானவர் என்று ஏற்கனவே என்னிடம் சொல்லி இருந்தார்கள். நானும் அதை நம்பி வீட்டு வரி ரசீதில் பெயர் மாற்றம் செய்து விடுவார் என்று நம்பிக்கையோடு இருந்தோம். நாங்கள் E.O.வை சந்தித்து அவரிடம் பேசிக் கொண்டிருக்கும்போது இரண்டு நபர்கள் E.O.வை தொலைபேசியில் பேசினார்கள். யார் அந்த இரண்டு நபர்கள் என்று எங்களுக்கு தெரிவிக்கவில்லை. E.O. மற்றும்

ஹெட்கிளார்க் இருவரும் ஒரு பதிவு பத்திரத்தை என்னிடம் காண்பித்தார்கள். அது என்னவென்று நாங்கள் பார்த்தபோது அதில் கடந்த 11.11.2003-ஆம் ஆண்டு ஆவணத்தின் எண். 1049 ஆகும். அதில் முதல் பக்கத்தில் எட்டாவது வரியில் எனக்கு பூர்வீக வழியில் பாத்தியப்பட்டது என்று சொல்லியிருந்தார்.

மேலும் நத்தம் சர்வே எண்.36/31ல் ஏழாவது வார்டு என்றும் 1199 சதுரடி உள்ள காலி மனை இடம் என்று எழுதப்பட்டுள்ளது. கடைசி பக்கத்தில் புதிய நத்தம் சர்வே எண்.463/1 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. என்னோடு கூட வந்தவர்கள் இதை படித்து பார்த்துவிட்டு இந்த பதிவு பத்திரம் எங்கள் இடம் இல்லை. இதற்கும் எங்களுக்கும் எந்த ஒரு சம்பந்தமும் இல்லை. மேற்படி நத்தம் சர்வே எண்.36/1 பகுதியில் உள்ள அனைவரும் எஸ்.சி மக்கள் குடியிருக்கும் பகுதி இதில் மேற்படி நித்தியானந்தம் என்பவரின் பூர்வீக பாத்தியப்பட்டது என்று எதன் அடிப்படையில் சொல்கிறார் என்று தெரியவில்லை. மேற்படி நபர் பத்திரத்தில் வீட்டு வரி விதிப்பு எண். வீட்டு எண். எதுவுமில்லை. இவருக்கும் மேற்படி சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. மேற்படி நித்தியானந்தம் என்பவர் கவுண்டர் இனத்தை சார்ந்தவர். இவர் சொல்லுகின்ற சொத்து விபரமும், சர்வே நம்பரும் எங்கள் வீட்டிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. நான்குமால் விபரத்தில் தவறுதலாக உள்ளது. இதையெல்லாம் E.O. அவர்களிடம் எடுத்துச் சொன்னோம். அவர்களும் பார்த்துவிட்டு E.O. மற்றும் ஹெட்கிளார்க் இருவரும் அனைத்து ஆவணங்களையும் பரிசீலித்த பிறகும் இவர்கள் சம்பந்தமே இல்லாத ஒருவரிடம் கட்டாயப் பஞ்சாயத்து பேசும்படி கூறி அலுவலகத்திற்கு வெளியே சென்று பேசும்படி நிர்பந்தித்தார்கள். இதற்கு எதிர்ப்பு தெரிவித்த போது E.O.வும் கோபப்பட்டு சத்தம் போட்டு பேசி எங்களுடைய ஆவணத்தின்படி பெயர் மாற்றம் செய்ய முடியாது என்று சொல்லி விட்டார்கள். மேலும் எனது ஆவணங்களை பரிசீலித்து எதிர்மனுதாரராகிய பேரூராட்சி நிர்வாக அதிகாரிகள் மற்றும் ஹெட்கிளார்க் உருவாக்கப்பட்ட போலி ஆவணத்தை ஆய்வு செய்ய வேண்டுமென்றும் மேலும் நெய்க்காரபட்டி பேரூராட்சி அதிகாரிகள் E.O. மற்றும் ஹெட்கிளார்க் இவர்கள் எங்களுக்கு மிகுந்த மன உளைச்சலும், வீண் அலைச்சலும், பண விரயமும் ஏற்படுத்தி விட்டார்கள்.

எனது பாட்டி பெயரில் உள்ள வீட்டு வரி ரசீதை எந்த ஒரு ஆவணமும் ஆதாரமும் இல்லாமல் பெயர் மாற்றம் செய்வதற்கு அனுமதி அளித்த அதிகாரிகளையும் தற்போது உள்ள E.O. மற்றும் ஹெட்கிளார்க் நடந்தவற்றை சரி செய்து கொடுக்க மறுக்கும் அதிகாரிகள் மீது மாண்புமிகு ஆணைய தலைவர் அவர்கள் உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், எனது பாட்டி திருமதி. பாப்பா பெயரில் எனது மாமியார் திருமதி. ரோசி அவர்களுக்கு எழுதிக் கொடுத்த உயில் சாசனத்தின் அடிப்படையில் பெயர் மாற்றம் செய்து தர வேண்டுமென்று இதன்மூலம் சாமானிய மக்களாகிய எங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி நீங்கும்படியாக சட்டமும் நியாயமும் நீதியும் நிலை நாட்டும்படியாகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 22.07.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் நெய்க்காரபட்டி பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3. நெய்க்காரபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தனது 18.12.2024 நாளிட்ட அறிக்கை ந.க.எண். 152/2022/அ–ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம், நெய்க்காரபட்டி பேரூராட்சிக்கு உட்பட்ட பழைய வரிவிதிப்பு எண்.2316 மற்றும் புதிய வரிவிதிப்பு எண்.1536 நித்தியானந்தம் பெயரில் உள்ளது. மேற்காணும் சொத்துவரியினை தங்கள் பெயருக்கு பெயர் மாற்றம் செய்து தருமாறு திருமதி. ரோசி என்பவரின் உங்கள் தொகுதியின் முதல்வர் அலுவலகத்திற்கு சமர்ப்பித்த 18.11.2023 , 02.03.2024 மற்றும் 14.05.2024 நாளிட்ட மனுக்களிலும் மற்றும் திரு. சுரேஷ்குமார் என்பவரின் 18.05.2024 நாளிட்ட மனுவிலும் சொத்துவரி பெயரை தனது பெயரில் (சுரேஷ்குமார்) மாற்றம் செய்து தரக் கோரி விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது. மேலும் மேற்காணும் சொத்து ரோசி அவர்களுக்கு திருமதி. பாப்பா என்பவரால் பதியப்படாத உயிலாக எழுதிக் கொடுத்துள்ளதாகவும் ஆவணங்களை இணைத்துள்ளார்.

ஆனால் திரு. சுரேஷ்குமார் என்பவரின் 18.05.2024 நாளிட்ட மனுவில் மேற்காணும் சொத்துவரி ரசீது தனது தந்தை நித்தியானந்தம் பெயரில் உள்ளது எனவும், மேற்காணும் சொத்துவரி ரசீதினை திருமதி. ரோசி என்பவர் பெயர் மாற்றம் செய்ய கோரி விண்ணப்பம் செய்துள்ளார் என்றும், மேற்காணும் சொத்துவரி எண்.1536 உள்ளடக்கிய சொத்து ஆவண எண்.1847/2003ன்படி தனது பெயருக்கு செட்டில்மெண்டாக பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும் மனு செய்துள்ளார். எனவே இருதரப்பினரும் சொத்துவரி பெயர் மாற்றம் செய்யக் கோருவதால், உரிய ஆவணங்களை சமர்ப்பிக்கும்பட்சத்தில் சொத்துவரி பெயர் மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விபரத்தினை மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரரும், எதிர்மனுதாரரான நெய்க்காரபட்டி பேரூராட்சி செயல் அலுவலரும் 09.04.2025 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 24.03.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திருமதி. M. முருகாம்பாள், என்பவர் 09.04.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

- திண்டுக்கல் மாவட்டம், பெரியகலையம்புத்துார் கிராமம், என்ற முகவரியில் வசித்த எனது பாட்டி (எனது மாமியாருக்கு பெரியம்மா முறை) திருமதி பாப்பா (லேட்), என்பவருக்கு வாரிசுகள் எவரும் இல்லாத நிலையில் மேற்படி விலாசத்தில் உள்ள சொத்தான (பழைய சர்வே எண்.36/1, புதிய சர்வே எண்.463/2) எனது பாட்டி தனது தங்கை மகள் ரோசி என்பவருக்கு 30.06.1990 அன்று உயில் சாசனம் மூலம் அளித்துள்ளார். திருமதி. ரோசி என்பவர் எனது மாமியார் ஆவார்.

- மேற்படி இடத்திற்கான சொத்து வரியானது (பழைய வீட்டு வரி விதிப்பு எண் 2316 (1996-98) திருமதி. பாப்பா பெயரில் இருந்த நிலையில், மேற்படி வீட்டில் வாடகைதாரராக இருந்த திரு. நித்தியானந்தம் என்கிற பெயரில் பேரூராட்சி செயல் அலுவலரால் முறைகேடாக பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. திரு. நித்தியானந்தம் என்பவரும் காலமாகி விட்டார்.

- இதுகுறித்து பேரூராட்சியில் அணுகிய போது எங்களுக்கு காட்டப்பட்ட பத்திரத்தில் சர்வே எண்.36/31, 7வது வார்டு, 1199 ச.அடி உள்ள காலி மனை இடம் எனவும் புதிய சர்வே எண்.463/1 என்று குறிப்பிட்டுள்ள ஆவணத்தை எங்களுக்கு சம்பந்தம் இல்லாத சொத்து பத்திரத்தை காட்டியுள்ளனர்.

எனவே எங்களுக்கு சம்பந்தமில்லாத திரு. நித்தியானந்தம் என்கிற பெயரிலுள்ள சொத்து வரியினை எனது பாட்டியான திருமதி. பாப்பா என்பவரின் பெயருக்கு சொத்து வரி மாற்றம் செய்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான நெய்க்காரபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி . ஒ. பாண்டீஸ்வரி என்பவர் 09.04.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:—

- திண்டுக்கல் மாவட்டம், பெரியகலையம்புத்தூர் கிராமம் என்ற முகவரியில் உள்ள இடத்திற்கான சொத்து வரி 1997 ஆம் ஆண்டு வரை திருமதி பாப்பா என்கின்ற பெயரில் இருந்து வந்தது.

- மனுதாரர் திருமதி M. முருகாம்பாள் என்பவர் சொத்து வரி மாற்றம் செய்யக் கோரும் இடமான திண்டுக்கல் மாவட்டம், நெய்க்காரபட்டி பேரூராட்சிக்குட்பட்ட பழைய வரி விதிப்பு எண்.2316 மற்றும் புதிய வரி விதிப்பு எண்.1526, 2008–09 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை, காலஞ்சென்ற திரு. நித்தியானந்தம் என்பவரின் பெயரில் சொத்து வரி உள்ளது.

- இதற்கிடையில் காலஞ்சென்ற திரு. நித்தியானந்தம் என்பவரின் மகன் திரு. சுரேஷ்குமார் என்பவர் தனது தந்தை பெயரிலுள்ள சொத்து, சொத்து வரி எண்.1536 உள்ளடக்கிய சொத்து ஆவண எண். 1847/2003ன்படி 11.11.2003 அன்று தனது பெயருக்கு செட்டில்மென்டாக பதிவு செய்யப்பட்டுள்ளதால் திருமதி ரோசி என்பவரின் பெயருக்கு சொத்து வரி மாற்றம் செய்திட ஆட்சேபனை தெரிவித்துள்ளார்.

- மேற்காணும் இரு தரப்பினரும் சொத்து வரி பெயர் மாற்றம் செய்திட பேரூராட்சியில் கோரியுள்ளனர்.

இந்நிலையில், சொத்து வரியானது திருமதி பாப்பா என்பவரின் பெயரிலிருந்து திரு. நித்தியானந்தம் என்பவரின் பெயருக்கு, எதன் அடிப்படையில் மாற்றம் செய்யப்பட்டதற்கான உரிய மூல ஆவணங்களை சரிபார்த்தும் மற்றும் மேற்படி சொத்திற்கான சரியான சர்வே எண்ணை சர்வேயர் மூலம் சரிபார்த்தும், உரிய விரிவான அறிக்கையினை 15 நாட்களுக்குள் சமர்ப்பிக்க கால அவகாசம் அளிக்குமாறு மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களை மிகவும் பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7. எதிர்மனுதாரரான நெய்க்காரபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவத்தில் 09.04.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தில் சொத்து வரியானது திருமதி. பாப்பா என்பவரின் பெயரிலிருந்து திரு. நித்தியானந்தம் என்பவரின் பெயருக்கு எதன் அடிப்படையில் மாற்றம் செய்யப்பட்டதற்கான மூல ஆவணங்கள் மற்றும் மேற்படி சொத்திற்கான சரியான சர்வே எண்ணை சர்வேயர் மூலம் சரிபார்த்தும் அறிக்கையினை 15 நாட்களுக்குள் அனுப்புவதாக தெரிவித்திருந்த நிலையில் தனது 07.05.2025 நாளிட்ட அறிக்கை ந.க.எண். 152/2022/அ–ல் திருமதி. பாப்பா என்பவரது பெயரில் உள்ள சொத்துவரி விதிப்பு

தொடர்பாக சம்பந்தப்பட்ட இடங்களை அளவீடு செய்ய சர்வே எண். 463/1 மற்றும் 463/2 ஆகிய புல இடங்களை அளந்து அத்துமால் செய்து தரக்கோரி 11.04.2025 நாளிட்ட கடிதம் ந.க.எண். 152/2022/அ மூலம் வட்டாட்சியர் கேட்டுக் கொள்ளப்பட்டதில் நில அளவையரால் 23.04.2025 அன்று மேற்காணும் இடத்தில் சர்வே பணி மேற்கொள்ளப்பட்டது. அவரின் அளவீடு செய்யப்பட்டதற்கான அறிக்கையை அனுப்புமாறு கோரப்பட்டுள்ளது. மேலும் திருமதி. பாப்பா என்பவர் பெயரிலிருந்து திரு. எம். நித்தியானந்தம் என்பவரின் பெயருக்கு சொத்துவரி பெயர் மாற்றம் செய்யப்பட்டதற்கான பதிவேடுகள் மற்றும் ஆவணங்களை பேரூராட்சி பணியாளர்களால் தேடுதல் பணி மேற்கொண்டும் அதன் தொடர்பான ஆவணங்கள் கண்டறிய முடியவில்லை என்பதால் கால அவகாசம் வேண்டியும், நில அளவையரின் அறிக்கையும் பெற்று அனுப்புவதாக பேரூராட்சியரின் செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

8. இதனைத் தொடர்ந்து பேரூராட்சி செயல் அலுவலர் தனது 19.06.2025 நாளிட்ட அறிக்கை ந.க. எண். 152/2022/அ–ல் திருமதி. பாப்பா பெயரிலிருந்து திரு. M. நித்தியானந்தம் பெயருக்கு சொத்துவரி பெயர் மாற்றம் செய்யப்பட்டது தொடர்பான ஆவணங்கள், பதிவேடுகள் தற்போது வரை கண்டறிய இயலவில்லை என தெரிவித்துள்ளார்.

மேலும் சொத்துவரி கேட்பு பதிவேட்டில் 1987-88 முதல் 1997-98 முடிய உள்ள நிதியாண்டுகளில் சொத்துவரி, வரிவிதிப்பு எண். 2316 கதவு எண். 15 திருமதி. பாப்பா என்ற பெயரில் உள்ளது எனவும், 1998-99 முதல் சொத்துவரி கேட்பு பதிவேடு வரிவிதிப்பு எண். 1386 கதவு எண். 10A, திரு. M. நித்தியானந்தம் என்பவர் பெயரில் உள்ளது எனவும் சொத்துவரி வரிவிதிப்பு எண். 2316 திருமதி. பாப்பா என்பவரது பெயரில் உள்ள வரிவிதிப்பு 1998-99 சொத்துவரி கேட்பு பதிவேட்டில் இல்லை எனவும் செயல் அலுவலர் அறிக்கையினை சமர்ப்பித்து, மேற்காணும் இடம் தொடர்பாக சர்வே எண். 463/1 மற்றும் 463/2 ஆகிய புல இடங்களை சர்வே பணி மேற்கொள்ளப்பட்டதை தொடர்ந்து வருவாய்த் துறையின் அறிக்கையினை விரைந்து பெற்று சமர்ப்பிக்கிறேன் எனவும் பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

9. மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம், நெய்க்காரபட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கைகள் மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

திண்டுக்கல் மாவட்டம், நெய்க்காரபட்டி இடத்தைச் சார்ந்த மனுதாரர் திருமதி. M. முருகாம்பாள் என்பவர் தனது 28.06.2024 நாளிட்ட முறையீட்டு மனுவில் திண்டுக்கல் மாவட்டம், பெரியகலையம்புத்தூர் கிராமம், என்ற முகவரியில் வசித்த மனுதாரரின் பாட்டி திருமதி. பாப்பா என்பவரின் பெயரில் இருந்த சொத்துவரி (வரிவிதிப்பு எண். 2316–1996-98) அக்குடியிருப்பில் வாடகைதாரராக இருந்த காலஞ்சென்ற திரு. நித்தியானந்தம் என்பவரின் பெயருக்கு நெய்க்காரபட்டி பேரூராட்சியால் முறைகேடாக பெயர் மாற்றம் செய்யப்பட்டது என புகாராக தெரிவித்து, மீண்டும் திருமதி. பாப்பா என்கிற பெயரிலேயே சொத்துவரியினை பெயர் மாற்றம் செய்திட ஆவன செய்யுமாறு வேண்டி கேட்டுக்கொண்டுள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம், நெய்க்காரபட்டி பேரூராட்சிக்குட்பட்ட பழைய வரிவிதிப்பு எண். 2316 மற்றும் புதிய வரிவிதிப்பு எண். 1536 ஆனது திரு. நித்தியானந்தம் என்பவரின் பெயரில் உள்ள நிலையில் திருமதி. பாப்பா என்பவரால் திருமதி. பாப்பா என்பவரின் தங்கை மகள் ரோசி என்பவருக்கு 30.06.1990 அன்று பதியப்படாத உயில் சாசனம் எழுதி கொடுத்துள்ளதை

பேரூராட்சியில் சமர்ப்பித்து, மேற்காணும் சொத்துவரியினை தனது (ரோசி) பெயரில் மாற்றம் செய்திடுமாறு திருமதி. ரோசி என்பவர் கோரியுள்ளார்.

இதற்கிடையில் காலஞ்சென்ற திரு. நித்தியானந்தம் என்பவரின் மகன் திரு. சுரேஷ்குமார் என்பவர் தனது தந்தை பெயரிலுள்ள சொத்து, சொத்து வரி எண்.1536 உள்ளடக்கிய சொத்து ஆவண எண். 1847/2003ன்படி 11.11.2003 அன்று தனது பெயருக்கு செட்டில்மென்டாக பதிவு செய்யப்பட்டுள்ளதால் திருமதி ரோசி என்பவரின் பெயருக்கு சொத்து வரி மாற்றம் செய்திட ஆட்சேபனை தெரிவித்துள்ளார்.

மேற்காணும் நிலையில், திருமதி. பாப்பா என்பவர் பெயரிலிருந்து திரு. எம். நித்தியானந்தம் என்பவரின் பெயருக்கு சொத்து வரியானது (பழைய வரிவிதிப்பு எண். 2316 மற்றும் புதிய வரி விதிப்பு எண். 1536) பெயர் மாற்றம் செய்யப்பட்டதற்கான தொடர்புடைய பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் கண்டறிய இயலாதுள்ள நிலையில், இது தொடர்பான சம்பந்தப்பட்ட சர்வே எண். 463/1 மற்றும் 463/2 ஆகிய இடங்களை நில அளவையரால் 23.04.2025 அன்று சர்வே பணி மேற்கொண்டு அவரின் அறிக்கை எதிர்பார்க்கப்படுவதாக நெய்க்காரபட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையில் தெரிவித்துள்ளபடி, அவ்வறிக்கை பெற்று, அதன்படி உரிய தொடர் நடவடிக்கையை, வருவாய்த் துறை மற்றும் பதிவுத் துறையுடன் ஆலோசித்து விரைந்து மேற்கொள்ளுமாறு நெய்க்காரபட்டி பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 10-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திருமதி. M. முருகாம்பாள்,
   க/பெ. முத்தைய்யன்
   பெரிய கலையம்புத்தூர் (அஞ்சல்),
   பழனி – 624 615
   திண்டுக்கல் மாவட்டம்.

2. செயல் அலுவலர்,
   நெய்க்காரபட்டி பேரூராட்சி,
   திண்டுக்கல் மாவட்டம்.

3. பேரூராட்சிகளின் இயக்குநர்,
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   இராஜா அண்ணாமலைபுரம்,
   எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
   (பெயரிட்ட உறையில்)
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   இராஜா அண்ணாமலைபுரம்,
   எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இருப்புக்கோப்பு/உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

14/7/25
செயலாளர்
11/7/25

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
சென்னை–600 032